[வலைப்பின்னல் மாற்றுமுறை]

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1999 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பஸ்யொதுன்றட்ட அபிவிருத்தி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(1999, மாச்சு மாதம் 26 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*1999, மாச்சு மாதம் 26 ஆந் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்கு குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

---

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.50** **தபாற் செலவு: ரூபா 3.50**

[*1999 ஆம் ஆண்டு மாச்சு 26 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது*.]

*ச.வ. – ஒ. 30/97*

## பஸ்யொதுன்றட்ட அபிவிருத்தி நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"பஸ்யொதுன்றட்ட அபிவிருத்தி நிறுவகம்" என்றழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிறுவகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட நிறுவகத்துடன் தொடர்புடையதுமான எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென மத்துகம என்னுமிடத்தில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டிருந்ததாலும். *முன்னுரை.*

அத்துடன் சொல்லப்பட்ட நிறுவகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அது கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப்பித்துள்ளதாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம் 1999 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பஸ்யொதுன்றட்ட அபிவிருத்தி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப்பெயர்.*

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பஸ்யொதுன்றட்ட அபிவிருத்தி நிறுவகத்தில் தற்போதைய உறுப்பினர்களாக அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்மேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "பஸ்யொதுன்றட்ட அபிவிருத்தி நிறுவகம்" என்னும் பெயர், மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும். *பஸ்யொதுன்றட்ட அபிவிருத்தி நிறுவகத்தைக் கூட்டிணைத்தல்.*

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக்குறிக் கோள்கள் பின்வருவனவாயிருக்க வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட எந்தவோர் அமைப்பையும் அபிவிருத்தி செய்தலும் மேம்படுத்தலும்;

(ஆ) அத்தகைய அமைப்புக்களின் திறனைத் கட்டி யெழுப்புதல்;

(இ) வசதியற்றவர்களின் கல்வியை மேம்படுத்தல்;

(ஈ) நிவாரண, புனரமைப்பு புனர்நிர்மாணக் கருத் திட்டங்களை மேற்கொள்ளல்;

(உ) சுகாதாரக் கல்வியை மேம்படுத்துதலும் போசாக் கின்மையை ஒழிப்பதற்கான தகவலை வழங்குதலும்;

(ஊ) வசதியற்றவர்களின் நலன்கள், அபிவிருத்தி என்பவற்றை முன்னெடுத்துச் செல்லுதல்;

(எ) தோட்டங்களிலும் கிராமங்களிலும் வருமானம் தரக்கூடிய கருத்திட்டங்களை மேம்படுத்தலும் அத்துடன் தொழில்வாய்ப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு சுய உதவிக் கருத்திட்டங்களை ஆரம்பித்தலும்;

(ஏ) வெள்ளம், சூறாவளி, வரட்சி போன்ற இயற்கை அனர்த்தங்களால் ஏற்படக்கூடிய கஷ்டங்களிலிருந்து விடுவிப்பதற்கு உதவி வழங்குதல்;

(ஐ) விவசாயம், காடு வளர்ப்பு, விலங்கு வளர்ப்பு ,நன்னீர் மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு என்பவற்றின் நவீன முறைகள் பற்றிய அறிவையும் தகவலையும் புத்தகங்களையும் துண்டுப்பிரசுரங்களையும் வெளியிட்டு விநியோகிப்பதன் மூலமாகவும், கருத்தரங்குகள், வேலைக்களங்கள், விரிவுரைகள், படக்காட்சிகள் என்பவற்றை நடாத்துதல் மூலமாகவும் பரப்புதல் ; அத்துடன்

(ஒ) வசதியற்றவர்கள் மத்தியில் சிக்கனத்தை மேம்படுத்து தல் ;.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

4. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், எழுத்திலான வேறே தேனும் சட்டத்திற்கும் அமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றில் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும், முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும், அளிப்புக்களையும், கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும் அதன் நிதிகளை முதலீடு செய்யவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலைக்கமர்த்தல், வேலை நீக்கஞ் செய்தல் ஆகியவற்றுக்கான தத்துவங்களும் அடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய, அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டும் அதற்கிணங்கத் தெரிவு செய்யப்படக்கூடியவர்களான பதவிதாங்குநர்களையும் அத்தகைய வேறு ஆட்களையும் கொண்டமைந்த முகாமைச் சபையினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாது முகாமைச்சபை, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று பதவி வகிக்கும் மன்றத்தின் முகாமைச்சபையாகுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

6. (1) உறுப்பினர்களின் ஏதேனும் ஒரு பொதுக்கூட்டத் திலும் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினரில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் பெரும் பான்மை வாக்குகளைக் கொண்டும் உறுப்பினரைச் சேர்த் தல், அவர்கள் விலகுதல், பதவி விலகுதல், ஓய்வு பெறுதல் அல்லது அவர்களை விலக்குதல் என்பவற்றுக்காகவும், முகாமைச்சபையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுப்ப தற்காகவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் முகாமைச் முகவர்களின் கடமைகளைப் புரிவதற்கும், முகாமைச் சபையினால் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்காகவும்

அத்துடன் பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும் என்பவற்றுக்காகவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது எழுத்திலான வேறேதனும் சட்டத்திற்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் கூட்டுத்தாபனம் காலத்துக்குக்காலம் ஆக்குதல் அதற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும் , அதேபோன்ற கூட்டமொன்றிலும் அதே முறையிலும் அவை மாற்றப்படலாம், அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம், திருத்தப்படலாம் அல்லது இல்லா தொழிக்கப்படலாம்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலிருக்கும் மன்றத்தின் விதிகள், இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணானவையாக இராத அளவுக்கு இப்பிரிவின் கீழாக் கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப்படற் பாலனவும் மன்றத்திற்குச் செலுத்தப்படற் பாலவைுமான கடன்கள்.*

7. இச்சட்டம் ொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று மன்றத்திற்குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புகளும், இத் தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அந் நாளன்று மன்றத்திற்கு வருமதியான எல்லாக் கடன்களும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனங்களை வைத்திருக்கலாம்.*

8. கூட்டுத்தாபனமானது,ஏதேனும் கொள்வனவு, அன்பளிப்பு, நன்கொடை, மரண சாதனக் கையளிப்பு என்ற வகையாகவோ வேறுவகையாகவோ அதற்குரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களைக் கொள்ளுவதற்கும், வைத்திருப்பதற்கும் சட்டரீதியாக இயலுமானதாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களையும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க உள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படலும் வேண்டும்.

**9.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது முகாமைச் சபையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி, எத் தகையதுமான எச்சாதனத்திலும் இடப்படலாகாது, அவர்கள் தாம் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும் அத்துடன் அத்தகைய கையொப்பமிடுதல் சாட்சியொருவராக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதற்குப் புறம்பான தாயிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவவாறு பொறிக்கப்படல் வேண்டும் என்பது.*

**10.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசினது உரிமைகளையேனும் ஏதேனும் அரசியல் அல்லது கூட்டி ணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் இச்சட்டத்தில் குறிப்பிட்டப்பட்டவர்களும், அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளைப் பங்கப்படுத்துவ தாகவோ பாதிப்பதாகவோ இருத்தல் ஆகாது.

*குடியரசினனும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்*

**11.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*